# தமிழ்நாடு தட்டச்சு - கணிணி பள்ளிகள் சங்கம்

## மாதிரித் தேர்வு - பிப்ரவரி 2022

# 979

கீழ்க்கண்டவற்றை *இரட்டை வரி* இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக் கவனம் செலுத்தப்படவேண்டும்):-

நாம் உயிர் வாழ்வதற்கு மருத்துவ உதவி தேவைப்படுகிறது. அதேபோல முதல் உதவி இருந்தால் அதுவும் நலன் பயக்கும். ஒரு மனிதனுக்குக் காயம் ஏற்பட்டால், அவனுடைய விதி, ஆபத்து நேர்ந்த உடன் அவன் யாருடைய கவனிப்புக்கு ஆளாகிறானோ, அவனுடைய செய்கைகளை அனுசரித்து இருக்கிறது. முதல் உதவி புரியும் வகை அறிந்த ஒருவன் அருகில் இருந்து சமயத்துக்கு ஏற்ற உதவி உடனே அளித்தால், அவன் பிழைக்க வாய்ப்பு உள்ளது. அப்படி உதவி செய்யத் தெரிந்தவர்கள் இல்லாவிட்டால் அநேக உயிர்கள் மாளும் நிலைமை நேர்கிறது. ஏதாவது காயம்பட்ட நேரத்திலும், திடீரென்று உடம்புக் கோளாறாகும் காலத்திலும், மருத்துவர் வந்து பார்வை இடுவதற்குள் கையில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு தக்க பயிற்சி பெற்றவர்களால் உடனே செய்யப்படும் சிகிச்சைக்கே முதல் உதவி என்று பெயர்.

அற்ப ஞானம் ஆபத்கரம் என்கிற பழமொழி யாவருக்கும் தெரிந்ததே. ஆயினும் எல்லா விதிகளுக்கும் விலக்குகள் உண்டு என்பது நமக்குத் தெரியும். அந்த விலக்குகளைக் கொண்டே விதிகளை நிரூபிக்கக் கூடும். மேற்சொன்ன விதிக்கு முக்கிய விலக்கு முதல் உதவியைக் குறித்து அற்ப ஞானமாவது அடைந்து இருப்பதே. முதல் உதவியைப் பொறுத்தவரையில், அற்ப ஞானம் இருந்தாலும் அது கொடிய நோயையும், பெரிய காயத்தையும் உயிர்ச் சேதத்தையும் விளைவிக்காமல் காக்கும் என்பதை நாம் உணர வேண்டும். இரத்த ஒழுக்கு, தீ பற்றுதலால் உண்டாகும் புண், எலும்பு முறிவு முதலிய நேரங்களிலும், தண்ணீரில் விழுதல், விஷம் ஏறுதல், பாம்புக் கடி போன்றவற்றால் உயிருக்கு ஆபத்து நேரிடும்போது, அறியாமை தீங்கு விளைவிக்கக் கூடியது. இந்த நேரங்களில் மருத்துவர் வரும் வரையில் என்ன செய்வது என்று தெரியாமல் சும்மா இருப்பதால் உயிர்ச் சேதம் ஏற்படும். முதல் உதவி செய்தால் அநேக உயிர்களைக் காப்பாற்ற முடியும். காயம்பட்ட மனிதனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் என்ன செய்வது என்பது தெரியாததாலும், எதைச் செய்தால் என்ன கெடுதல் நேரிடுமோ என்ற பயத்தாலும் அநேகர் முதல் உதவி புரிய முன்வருவது இல்லை.

முதல் உதவி செய்பவர்கள் தங்கள் கையில் கிடைத்த பொருள்களைக் கொண்டு உடனே சிகிச்சை அளிக்க வேண்டும். நிலைமையைப் பொறுத்து கட்டுக்களை உபயோகிக்க வேண்டும். எப்போதும் திரிகோணக் கட்டையே நம்பி இருக்கக் கூடாது. அதற்குப் பதிலாக எப்போதும் கைக்குட்டைகளை உபயோகிக்கலாம். இரத்த ஒழுக்குக்கு தகுந்த சிகிச்சை உடனே செய்ய வேண்டும். காயம்பட்ட இடத்தில் இறுகி, கட்டியாய் கட்டிப்போகும் குணம் இரத்தத்திற்கு உண்டு. இரத்தம் ஒழுகினால் அதை நிறுத்த இயற்கையாக உள்ள உபாயங்களில் இது ஒன்று. ஆகையால் காயத்தைக் கையால் தொடாமல் ஆற வைப்பதோடு, இறுகி இருக்கும் இரத்தத்தைக் கலைக்காமல் விட்டு வைக்கவேண்டும். தேகத்தின் வெளிப்புறத்தில் இரத்தம் ஒழுகினால், அந்த இடத்தில் கெட்டியாய் அமுக்கினால் ஒழுக்கு நின்றுவிடும்.